**சக்தி பௌண்டேஷன் - தமிழ் CAC வகுப்பு**

**Uni5 பக்த விஜயம் - 34. ஸ்ரீஓஹ்ரு சாவ்கார்**

---

தூய சமூஹ சேவைக்கு உரிய அனைத்து பலமும் ப்ரபஞ்ச சக்தியால் தரப்படும்.அதை அன்பர்கள் வேண்டியபோதே சுயநலம் இன்றிப் பயன்படுத்துவர்.இதைக் காஞ்சிப் பெரியவாள் அடிக்கடி கூறுவார்.அதுவே நமக்கும் உண்மையான சக்தியாக இன்று வரை உள்ளது.

இவர்கள் மிகவும் எளிய வாழ்க்கையை மேற்கொண்ட தம்பதியினர்.அன்றாடம் பண்டரீபுர யாத்ரீகர்களுக்கு உணவும் உடையும் வழங்குவர்.வரும் வருவாயில் மிகவும் ஸ்ரத்தையுடன் இவர்கள் செய்யும் பாகவத சேவை மிகவும் ப்ரசித்தி ஆனது.

**அடகு போன மூக்குத்தி**

அன்று சாவ்கார்ஜி ஒரு வேலையாக வேறு ஊருக்குச் சென்று விட்டார்.மனைவியார் தனித்து இருக்கும் காலம் பார்த்து ஒரு பாகவதர் வீடேறி வந்து உணவு தருமாறு வேண்டினார். வீட்டில் அன்று ஒரு பண்டமும் இல்லை.என்ன செய்வது.

**ஆயிரம் பொற்காசுகள்**

அம்மையார் கடை வீதிக்குச் சென்று தன் ஒற்றை மூக்குத்தியை [சேவை மனப்பான்மை பற்றாக ஆகக்கூடாது என்ற குறியீடு மூக்குத்தி] அடகு வைத்துப் பண்டங்கள் பெற்று வந்து அறுசுவை உணவிடும் சமயம் இன்னும் பலர் சேர்ந்து உண்ணும் நிலையும் ஏற்பட்டது.அம்மையார் வருவதற்குள் அவரது ஏழ்மையை உணர்ந்த அன்பர் ஒருவர் வீட்டுக்குள் சென்று பாத்திரபண்டங்களைப் பார்த்தார், உள்ளே ஏதும் இல்லை.தமக்கு என எதையும் சேர்க்காத அவர்களின் பக்தியை எண்ணி மகிழ்ந்த அவ்வன்பர் அம்மையார் வந்ததும் ஆயிரம் பொற்காசுகள் அளித்துச் சென்றார்.பண்டரீபுர தெய்வதமே இதைச் செய்வதை உணர்ந்தார் அம்மை.கணவன் வந்ததும் அதைக் கூற அவர் மகிழ்ந்தார்.

காலம் சென்றது.

எப்போதும் போல அவர்கள் உழைத்துத் தன் சக்திக்கு ஏற்ப அடியாருக்கு அன்னமும் உடையும் தந்தனர்.பொற்காசுகளை மறந்தே போயினர்.

அப்போது பார்த்து கார்த்திகை ஏகாதசி வர அமோஹமான பாகவதக் கூட்டம் யாத்ரை செய்து வரும் காலம் அது.இவர்களின் ஊர் வழியே வரும் போது

இவர்களின் சமாராதனையில் கலந்து கொள்ளவே பலர் வருவதை எண்ணி எண்ணித் தம்பதியினர் மகிழ்கிறார்கள். கூட்டம் அதிகம் ஆன கட்டத்தில் தான் அவர்களுக்குப் பொற்காசுகளின் ஞாபகமே வருகிறது.

உடனே அக்காசுகளை எடுத்து எதிர்காலத்தைப் பற்றி எண்ணாமல் கவலைப் படாமல் பாகவதக் கைங்கர்யம் செய்தனர்.

பண்டரீ தெய்வத்தின் அருளால் அவர்கள் வாழும் வரை அவர்களுக்கு சேவை செய்ய சக்தி கிடைத்தது.இதுவே நமக்கு ஒரு பாடம்.

ஹரி ஓம்!